©
தமிழ்நாடு அரசு
2018

பதிவெண்: எம். 3

# சேலம் மாவட்ட அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

சேலம், செப்டம்பர் 21, 2018

[விளம்பி, புரட்டாசி 5 - திருவள்ளுவர் ஆண்டு 2049] [எண் 7

## உள்ளாட்சித்துறை அறிவிக்கை

(ந.க.எண்.1273/2018/(அ-1), நாள் 29.05.2018)

### ஆத்தூர் நகராட்சி, சேலம் மாவட்டம்

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை- அறிவிக்கை

(நகர்மன்ற தீர்மானம் எண்.312, நாள்.28.03.2018)

தனியார் கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் அரசு உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் கல்வி நிறுவன கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்க சட்ட திருத்தம் செய்யப்பட்டுள்ளது பற்றிய அறிவிக்கை

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 82ன் படி நியாயமான வருடாந்திர வாடகையின் அடிப்படையில், நகராட்சியில் சொத்து வரியானது விதிக்கப்படுகிறது. மேலும், வரிவிதிப்பு விதி 6-A படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சொத்து வரியினை நிர்ணயம் செய்ய வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் (இரண்டாம் திருத்தம்) சட்டம்-2018, (2018, தமிழ்நாடு சட்டம் 6)-ல், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83 (1) (சி)க்கு கீழ்க்கண்டவாறு சட்டத் திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.

## AMENDMENTS TO THE TAMILNADU DISTRICT MUNICIPALITIES ACT, 1920.

5. In Section 83 of the Tamil Nadu District Municpalities Act, 1920, in sub-section (1).

(1) for clause (c). the following clause shall be substituted, namely:-

"(c) buildings used for educational purpose including hostels and libraries, run by the Governme Municipality or any other local authority or institutions aided by the Government and buildings usec charitable purpose of sheltering the destitute or animals and orphanages, homes and schools for the and dumb, asylum for the aged and fallen women and such similar institutions run purely on philanthr lines as are approved by the council:

Provided that the buildings used for educational purpose by the Government aided instituti for conducting self-financing courses shall be subject to levy of property tax;":

2) in the provison, for the Expression "clauses (a), (c) and (e)" the expression "clauses (a) and shall be substituted.

மேற்படி சட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல் பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் மீது சொத்து வரி விதிக்கப்பட வேண்டும் மற்றும் அரசி உதவி பெற்று செயல்பட்டு வரும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வருமாயின் அக்கட்டிடங்கள் மீது சொ வரி விதிக்கப்பட வேண்டும்.

இது தொடர்பாக ஆத்தூர் நகராட்சி சிறப்பு அதிகாரி/மன்றத் தீர்மானம் எண்.312, நாள்.28.03.2018 அனுமதிக்கப்பட்டது.

- தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83 (1) (சி)–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்ப விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு, சொத்து வரியிலிருந்து விலக்களிக்கவும்.
- தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83 (1) (சி)–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்ப விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்க அனைத்திற்கும் சொத்து வரி விதிக்கவும்.
- தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83 (1) (சி)–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, கல்வி பயன்பாட்டிற்காக அரசின் உதவி பெற்று நடத்தப்படும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் பட்சத்தி அந்நிறுவனங்களின் கட்டிடங்களுக்கு சொத்து வரி விதிக்கவும்.

- கல்வி பயன்பாட்டிற்கான அனைத்து கட்டிடங்கள் மற்றும் கல்வி பயன்பாட்டிற்கான அரசின் உதவிபெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் நிறுவனங்களின் கட்டிடங்கள் ஆகியவற்றின் மீது குடியிருப்பிற்கு விதிக்கப்படும் சொத்து வரி விகிதத்தில் 1.5 மடங்கு சொத்து வரியாக விதிக்கவும்.
- தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83 (1) (சி)–ற்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ள காலமான 2017–2018 இரண்டாம் அரை ஆண்டிலிருந்து, மேற்படி கட்டிடங்களுக்கு சொத்து வரி விதிக்கவும்.
- தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 78 (3)–ன் படி, ஆட்சேபனைகளை அளிப்பதற்காக ஒரு தமிழ் நாளிதழில் அறிவிப்பு வெளியிடுவதற்கும் மற்றும் அலுவலக அறிவிப்பு பலகையில் ஒட்டி அறிவிப்பு செய்வதற்கும் அனுமதி அளித்துள்ளது.

இதன்படி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 78 (3)ன் படி, மேற்கண்ட முறையில் சொத்து வரி விதிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள விவரம் அறிவிப்பு செய்யப்படுகிறது. இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 நாட்களுக்கு பின்னர், சொத்துவரி விதிப்பினை மேற்கொள்வது குறித்து இறுதி செய்யப்படும்.

எனவே, மேற்குறிப்பிட்ட சொத்து வரி விதிப்பு குறித்து ஆட்சேபணைகள் ஏதுமிருப்பின், அதனை, குறிப்பிட்ட நாட்களுக்குள், எழுத்து மூலமாக ஆணையர், ஆத்தூர் நகராட்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

ஆத்தூர்,
13.08.2018.

க.கண்ணன்,
ஆணையாளர்,
ஆத்தூர் நகராட்சி.

**ந.க.எண்.1665/2017/எச்1 நாள்.08.08.2017**

**மேட்டூர் நகராட்சி (சேலம் மாவட்டம்)**

**மேட்டூர் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016**

**(தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306ன் கீழ் இயற்றப்பட்டது)**

**அறிவிப்பு**

மேட்டூர் நகராட்சியின் 18.05.2017 ம் நாளிட்ட தீர்மான எண்.103ல் , சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு சட்டம் 1986 (சட்ட எண்.29/1986)ல் பிரிவு 3இ 6 மற்றும் 25களில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மத்திய அரசு பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை பணிகளை முறைப்படுத்த பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016ல் , பிளாஸ்டிக் கழிவு உபவிதியில் குறிப்பிட்டுள்ள பயனீட்டாளர் கட்டணம்/அபராத கட்டணம் யாவும், இந்நகராட்சியில் செயல்படுத்த 20.05.2017ம் தேதி தினபூமி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டு, பொது மக்களின் கருத்து மற்றும் ஆட்சேபனைகள் 26.06.2017ம் தேதிக்குள் நகராட்சி ஆணையாளருக்கு எழுத்து மூலம் தெரிவிக்க விளம்பரம் செய்யப்பட்டது. பொது மக்களிடமிருந்து கருத்து மற்றும் ஆட்சேபனைகள் ஏதும் வரப்பெறாததால், நகர்மன்ற தீர்மான எண்.133 நாள்.24.07.2017–ல் ஏற்கனவே நகர்மன்ற தீர்மான எண்.103 நாள்.18.05.2017–ல் நிறைவேற்றப்பட்டதை உறுதி செய்து

01.10.2017 முதல் அமல்படுத்த தீர்மானம் நிறை வேற்றியது. மேலும் இது குறித்து நகராட்சி நிர்வாக ஆணை சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.11095–23/2017/தி3 நாள்.24.05.2017–ல் பிளாஸ்டிக் கழிவு 2016–ல் உப விதிகளுக்கு கொள்கை அனுமதி (**Principle Clearance**) பெறப்பட்டுள்ளதற்கு இணங்க, பிளா கழிவு உப விதியில் குறிப்பிட்டுள்ள பயனீட்டாளர் கட்டணம்/அபராத கட்டணம் யாவும் இந்நகராட்சியில் 01.10. முதல் அமல்படுத்தப்படுகிறது.

**மேட்டூர் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகள். தமிழ்நாடு மாவட்ட நகராட் சட்டம் 1920 பிரிவு 306ன் கீழ் இயற்றப்பட்டுள்ளது.**

1.0 தலைப்பு : இது மேட்டூர் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணைவிதிகள் 2016 என்று அழைக்கப்படும்.

2.0 செயல்பாடு எல்லை : இந்தத் துணைவிதிகள் மேட்டூர் நகரின் எல்லைக்கு உட்பட்ட அனைத்து பொ இடங்களுக்கும் மற்றும் மாநகரத் திடக் கழிவுகள் ஏற்படுத்தும் அனைவருக்கும் மற்றும் மேட்டூர் நகர எல்லைக்குள் தனியார் உரிமையில் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் அனைத்து வளாகங்களுக் பொருந்தும்.

3.0 வரையறை : இந்தத் துணைவிதிகளில் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணைக பயன்படுத்தப்பட்டுள்ள வரையறை செய்யப்படாத சொற்கள் மற்றும் அவை உணர்த்தும் பொ வெளிப்பாடுகள், சூழல் மாற்றாகக் கொள்ள தேவை இல்லை என்றால், முறையே மேட்டூர் நகராட்சி (மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920) த்தில் கொடுக்கப்பட்டுள்ளவாறு இருக்கும் கீழ்க்கண்ட சொற்க பொருள்கள் இங்குப் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளன.

"சட்டம்" :– சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986 (29 of 1986)

1. அங்கீகரிக்கப்பட்ட உரிமையாளர்கள்:– (Brand owner) பதிவு செய்யப்பட்ட சின்னத்தின் கீழ் அ பெயரின் கீழ் பொருள்கள் விற்கும் நபர் அல்லது நிறுவனம்.

2. தூக்குபைகள்:–பொருள்களை சுமந்து செல்லும் வகையில் பிளாஸ்டிக் பொருள்கள் அல்லது மக் தன்மையுள்ள பிளாஸ்டிக் பொருளால் செய்யப்பட்ட ஒரு சுமை தாங்கும் அம்சம் கொண்ட பைகள்.

3. சரக்கு :–விற்கவோ அல்லது வாங்கவோ செய்யப்படும் அனைத்து சந்தைப்படுத்தப்படும் பொருட்கள் அல்லது சாதனங்கள்.

4. உரமாகும் பிளாஸ்டிக்:–உயிரியல் செயல் முறைகள் மூலம் பிளாஸ்டிக் உடைதலுக்கு உள்ளாக்க வழக்கமான பெட்ரோ சார்ந்த பிளாஸ்டிக் தவிர்த்து அழைக்கப்படுகின்ற பிளாஸ்டிக்.

5. சிதைவு:–ஒரு பொருளை மிகவும் சிறிய துண்டுகளாக ஆக்குதல்.

6. அங்கீகாரம்:–மாநில மாசுக்கட்டுபாட்டு வாரியம் அல்லது மாசுக்கட்டுபாட்டுகுழு உள்ளாட்சி அமைப்பிற்கோ அல்லது நிறுவனத்திற்கோ அனுமதி அளித்தல்.

7. துணை விதிகள்:–உள்ளாட்சி அமைப்புகள் தங்கள் எல்லைகளுக்குள் விதிகளை திறம்பட செயல்படுத்தி எளிதாகவும் கட்டுப்பாட்டு கட்டமைப்பு.

8. நீடித்த தயாரிப்பாளர்கள் பொறுப்பு:–பிளாஸ்டிக், தகரம், கண்ணாடி மற்றும் நெளி பெட்டிகள் போன்ற பொருட்களின் இறுதிநிலை வரை சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கா வண்ணம் பாதுகாப்பது தயாரிப்பாளரின் பொறுப்பு.

9. உணவு பொருள்கள்:–சாப்பிட தயாராக உள்ள உணவு பொருள்கள் விரைவு உணவு, பதப்படுத்தப்பட்ட அல்லது திரவ உணவு, உணவுத்தூள், ஆகியவை உணவுப்பொருளாக்களில் அடங்கும்.

10. வசதி:–பிளாஸ்டிக் கழிவுகள் தொகுப்பு, சேமிப்பு மறுசுழற்சி, செயலாக்கம் மற்றும் அகற்றல் ஆகியவை மேற்கொள்ளப்படும் வளாகங்கள்.

11. உற்பத்தியாளர்:–ஒரு நபர் அல்லது நிறுவனம் பிளாஸ்டிக் உற்பத்தியில் ஈடுபடுவது.

12. பிளாஸ்டிக் தாள்:–பிளாஸ்டிக் பொருளால் உருவாக்கப்பட்ட பிளாஸ்டிக் தாள்

13. பிளாஸ்டிக் கழிவுகள்:–பிளாஸ்டிக், பயன்படுட்திய பிறகு அல்லது திட்டமிடப்பட்ட பயன்பாடு முடிந்தவுடன் அப்புறப்படுத்தப்படுகின்ற பொருள்கள்.

14. மறுசுழற்சி:–ஒதுக்கப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளிலிருந்து புதிய தயாரிப்பு செய்வது.

15. தண்டம் (Fine):- பிளாஸ்டிக் கழிவுகள் உற்பத்தி செய்பவர்கள், செயலாக்கம் செய்பவர்கள் ஆகியோர் விதிகள் மற்றும் துணைவிதிகளை மீறும்பட்சத்தில் விதிக்கப்படும் தண்டம்.

16. முறைசாரா கழிவு சேகரிப்பவர் (Informal waste collector):– மறுசுழற்சி பொருள்களை சேகரித்தல், வகைபடுத்துதல், விற்பனை செய்தல், தனிநபர்கள், சங்கங்கள், அல்லது கழிவுபொருள்கள் பணியில் ஈடுபடும் கொள்முதல் செய்யும் வாத்தகர்கள்.

17. உள்ளாட்சி(local body) :–இந்த விதிகளை செயல்படுத்தும் நோக்கில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் நகரசபை, நகர் நிகாம், மாநகரசபை, நகர் பாலிகா, பரிஷட், நகராட்சி, பஞ்சாயத்து மற்றும் பேரூராட்சி, வரையறுக்கப்பட்ட (Notified) பகுதிகள் வரையறுக்கப்பட்ட தொழிற்துறை குடியிருப்புகள் (Notified Industried Townships) என பல்வேறு பெயர்களில் அழைக்கப்படும் அமைப்புகள்.

18. பொருட்கள் மீட்பு வசதி (Materials recovery facility ):– உள்ளாட்சி அமைப்புகளாலோ அ அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களாலோ திடக்கழிவுகளிருந்து மறுசுழற்சிக்குரிய முறைசாரா சேகரிப்பவர்கள் அல்லது உள்ளாட்சி அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது பணி அமர்த்தப்பட்டவர் மேற்கொள்ள ஏற்படுத்தப்பட்ட வசதி.

19. வகை பிரித்தல் (sorting )–கலவையான கழிவுகளிலிருந்து பொருத்தமான கழிவுகளை பல் கூறுகளாக காகிதம், பிளாஸ்டிக், உலோகங்கள், கண்ணாடி என மறுசுழற்சி பொருள்களாக பிரித்தல்.

20. தெருவிற்பனையாளர் (அ) தெரு ஓர சாலை வியாபாரிகள் (Street Vendor):- ஒரு தெரு, சந்து, நடைபாதை, நடைபாதை, பொது பூங்கா அருகில் அல்லது வேறு எந்த பொது இடத்திலோ அல்லது தன பகுதியில் ஒரு தற்காலிகமாக கட்டியெழுப்பட்ட அமைப்பில் இருந்தோ, அல்லது ஒரு இடத்தில் இருந்து இடத்திற்கு நகர்ந்து சென்றோ, சுற்றிதிரிந்தோ உணவுபொருள்கள், காய்கறிகள், பழங்கள், அன் பயன்பாட்டு பொருளையோ விற்பவர்கள்.

21. கழிவு உருவாக்குபவர் (Waste Generator):-ஒரு நபர் அல்லது குழு குடியிருப்புகள் அல்லது குடியி அல்லாத இடங்களில், வணிகநிறுவனங்கள், இந்திய ரயில்வே பகுதிகள், மற்றும் பாதுகாப்பு அமைப் உட்பட திடக்கழிவு உருவாக்குபவர்களை குறிக்கும்.

22. முகமை(Agency) : தெருவைப் பெருக்குதல், கழிவுகளை எடுத்தல், பயனர் கட்டணம் பெ போன்றவற்றிற்காக, முகமைக்கும் மேட்டூர் நகராட்சிக்கும் ஒப்பந்தம் அடிப்படையில் கடமைகளை ஆ மேட்டூர் நகராட்சியால் அமர்த்தப்பட்ட அல்லது தனக்காகச் செயல்பட அதிகாரம் வழங்கப்பட்ட தனி நிறுவனம்.

4.0 கழிவு உருவாக்குபவர்களின் கடைமைகள்–

1) கழிவு உருவாக்கும் ஒவ்வொருவரும் பிளாஸ்டிக் கழிவு உருவாக்கத்தை குறைக்கவும், பிளாஸ்டிக் கழிவுக உருவாகும் இடத்திலேயே பிரிக்கவும் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 அல்லது அவ்வப்போ ஏற்படுத்தக்கூடிய விதிகளின் கீழ் செயல்படவேண்டும்.

2) 50 மைக்ரான் அடர்த்தி அளவிற்கு குறைவாக அல்லது அரசால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் அட அளவிற்கு குறைவாக உள்ள ஏற்கனவே உபயோகப்படுத்தாத அல்லது மறுசுழற்சிக்கான அல் மக்கக்கூடிய கைப்பைகளை எந்த ஒரு நபரும் தயாரிக்கவோ அல்லது இருப்பு வைக்கவோ விநியோகிக்க அல்லது விற்பனை செய்வதோ கூடாது. மீறினால் பறிமுதல் செய்வதுடன் அபராத அட்டவணை குறிப்பிட்டவாறு தண்டம் செலுத்த வேண்டி வரும்.

3) நகராட்சி எல்லைக்குள் ஒரு முறையே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக்பைகள், பிளாஸ்டிக் கேரிபை பிளாஸ்டிக் பூசப்பட்ட தட்டுகள், பிளாஸ்டிக்கப்புகள், பிளாஸ்டிக் டம்ளர்கள், பிளாஸ்டிக் மேஜைவிரிப்பு பிளாஸ்டிக் தாள்கள் ஆகியவையும் தடை செய்யப்படுகின்றன. மீறினால் பொருள்களை பறிமு செய்வதுடன் அபராத அட்டவணையில் குறிப்பிட்டவாறு தண்டம் செலுத்த வேண்டி வரும்.

4) மறுசுழற்சிக்கான அல்லது மக்கக்கூடிய பொருள்களை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட கைப்பைகளைக்கொண்டு உணவுப்பொருள்களை சேமிக்கவோ அல்லது எடுத்துச்செல்லவோ விற்பனை செய்யவோ அல்லது மொத்தமாக கட்டவோ கூடாது.

5) பிளாஸ்டிக் கழிவுகளை தெருகளிலோ, பொது இடங்களிலோ, சாலை ஓரங்களிலோ, நீர்க்கால்களிலோ, நீர்நிலைகளிலோ போடக்கூடாது. மீறினால் அபராத அட்டவணையில் குறிப்பிட்டவாறு தண்டம் செலுத்த வேண்டி வரும்.

6) வீடுகளில் உருவாகும் பிளாஸ்டிக் கழிவுகள் உருவாகும் இடத்திலேயே தனியாக பிரித்து சேகரித்து உள்ளாட்சி அமைப்பிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட முகமையிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மறுசுழற்சி செய்பவர்களிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட குப்பை சேகரிப்பர்களிடமோ வழங்கவேண்டும்.

7) உணவு விடுதிகள், பிற நிறுவனங்கள், அலுவலகங்கள், ஆகியவற்றில் உருவாக்கப்படும் பிளாஸ்டிக் கழிவுகளை உள்ளாட்சி அமைப்பிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட முகமையிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மறுசுழற்சி செய்பவர்களிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட குப்பை சேகரிப்பர்களிடமோ வழங்கவேண்டும்.

8) கழிவுகள் உருவாக்கும் அனைவரும் நகராட்சியால் ஏற்படுத்தப்பட்ட துணைவிதிகள் சேகரிப்பு மற்றும் மேலாண்மை வசதிகளுக்குரிய பயனர் கட்டணம் செலுத்தவேண்டும்.

9) திறந்த வெளியில் நிகழ்ச்சி நடத்தும் நிகழ்ச்சி அமைப்பாளர்கள் நிகழ்சியின் போது உருவாகும் பிளாஸ்டிக் கழிவுகளை தனியாக பிரித்து சேகரித்து உள்ளாட்சி அமைப்பிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட முகமையிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மறுசுழற்சி செய்பவர்களிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட குப்பை சேகரிப்பர்களிடமோ வழங்கவேண்டும்.

10) பிளாஸ்டிக் குப்பைகள் உருவாக்குபவர்கள் யாரும் தங்களால் உருவாக்கப்படுகின்ற பிளாஸ்டிக் குப்பைகளினை தெருக்களிலோ, பொது இடங்களிலோ நீர் நிலைகளிலோ எரிவதோ, எரிப்பதோ அல்லது புதைப்பதோ கூடாது,

5.0 குறியீடு மற்றும் பெயரிடல் **(Marking and Labelling):-**

1) ஒவ்வொரு பிளாஸ்டிக் கேரிபையிலும் கீழ்க்கண்ட விவரங்கள் ஆங்கிலம் (அ) உள்ளூர் மொழியில் அச்சடித்து இருக்க வேண்டும்.

a. தயாரிப்பாளர் பெயர், பதிவு எண், பையின் அடர்த்தி (Thickness).

b. பல அடுக்கு பைகளாக ( Multi Layered Packing) இருப்பின் தயாரிப்பாளர் பெயர் மற்றும் பதிவு எண் குறிப்பிட வேண்டும்.

2) ஒவ்வொரு மறுசுழற்சி கைப்பைகளிலும் "மறு சுழற்சிக்கானவை" என இந்திய தர நிர்ணயம் IS.14534.1998 இல் தெரிவிக்கப்பட்டுள்ள மற்றும் அதன் அடிப்படையில் அவ்வப்போது மறுசுழற்சிக்கான பிளாஸ்டிக் குறித்து அறிவிக்கப்படும் வழிகாட்டுதலின்படி இருக்க வேண்டும்.

3) ஒவ்வொரு மக்கும் கைப்பைகளிலும் "மக்கக்கூடியவை" என இந்திய தர நிர்ணயம் IS.17088.2008 இல் தெரிவிக்கப்பட்டுள்ள மற்றும் அதன் அடிப்படையில் அவ்வப்போது மறுசுழற்சிக்கான பிளாஸ்டிக் குறிட்து அறிவிக்கப்படும் வழிகாட்டுதலின்படி இருக்க வேண்டும்.

**6.0 கடைகாரர்கள், சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் தெரு விற்பனையாளர்கள் பொறுப்பு**

1) சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் தெரு விற்பனையாளர்கள் விதிகள் கீழ் பரிந்துரைக்கப்படும் குறியீடுகள் மற்றும் பெயர்கள் இல்லாத கேரிபைகள் அல்லது பிளாஸ்டிக் தாள், அல்லது பல அடுக்கு பேக்கேஜ் ஆகியவற்றை விற்கவோ அல்லது அவற்றில் பொருட்கள் வழங்கவோ கூடாது. அவ்வாறு விற்பது தண்டனைக்குரிய குற்றம். இது அபராத அட்டவணையில் குறிப்பிட்டவாறு தண்டம் செலுத்த வேண்டி வரும்.

2) பொருட்களை 50 மைக்ரானிற்கு மேற்பட்ட கேரிபைகளில் வழங்க தயாராக உள்ள கடைக்காரர்கள் தெரு விற்பனையாளர்கள் சில்லறை விற்பனையார்கள் நகராட்சியில் வருடத்திற்கு ரூ 48,000 (மாதம் ரூ 4000 ) பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை கட்டணம் செலுத்தி பதிவு செய்யவேண்டும். ஆண்டுதோறும் கட்டணம் செலுத்தி பதிவை புதுப்பிக்கவேண்டும்.

3) நகராட்சியில் பதிவுசெய்யப்பட்ட விற்பனையாளர்கள் " பிளாஸ்டிக் கேரிபைகள் வழங்க கட்டணம் வசூலிக்கப்படும் " என விளம்பரம் செப்திட வேண்டும்.

4) நகராட்சியில் பதிவு செய்யப்பட்ட கடைகாரர்கள் சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் தெரு விற்பனையாளர்கள் மட்டுமே கேரிபைகள் வழங்க தகுதி உடையவர்கள். பதிவு செய்யாமல் பிளாஸ்டிக் கேரிபைகள் விற்பனை, பொருள்கள் வழங்குதல், ஆகியவை தண்டனைக்குரிய குற்றம். இது அபராத அட்டவணையில் குறிப்பிட்டவாறு தண்டம் செலுத்த வேண்டி வரும்.

**7.0 நகராட்சியின் கடமைகள்**

a. பொருட்களை 50 மைக்ரானிற்கு மேற்பட்ட கேரிபைகளில் வழங்க தயாராக உள்ள கடைக்காரர்கள் தெரு விற்பனையாளர்கள் சில்லறை விற்பனையாளர்களினை பதிவு செய்து சான்று வழங்கல்.

b. பிளாஸ்டிக் கழிவுகளை பாதுகாப்பான முறையில் சேகரித்து இருப்பு வைத்து தரம் பிரித்து எடுத்துச்சென்று முடிவு செய்தலை உறுதி செய்யவேண்டும்.

c. பிளாஸ்டிக் கழிவுகளை முடிவு செய்யும் போது சுற்றுப்புற சூழல் பாதிக்காவண்ணம் மேற்கொள்ளவேண்டும்.

d. பிளாஸ்டிக் கழிவுகளை சேகரிக்கும் பணியில் தயாரிப்பாளர்களையும் பங்கு பெற செய்யவேண்டும்.

e. மறுசுழற்சிக்கான வழிகளை உறுதி செய்யவேண்டும்.

f. கழிவுகளை கையாளும் பணியில் தனியார் நிறுவனங்கள் குழுக்கள் மற்றும் கழிவு சேகரிப்போரையும் பங்கேற்க செய்யவேண்டும்.

g. பிளாஸ்டிக் கழிவுகளை திறந்த வெளியில் எரிப்பதை தடை செய்து அதனை உறுதி செய்யவேண்டும்.

h. தகவல், கல்வி, தொடர்பின் மூலம் பொதுமக்களுக்கும் கழிவுகளை உற்பத்தி செய்பவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தவேண்டும்.

8.0 இந்தத் துணை விதிகளை மீறினால் செலுத்தும் தண்டம்

8.1 இந்தத் துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்குப் பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கைக் காலம் 90 நாள்கள் உண்டு. அதற்குப் பிறகு இந்தத் துணைவிதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணை (அட்டவணை–1) படி இந்தத் துணைவிதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராதத் தொகையுடன் தண்டிக்கப்படுவர். கழிவு உருவாக்குபவர் இந்தத் துணைவிதிகள் ஏதாவது ஒன்றை மீறுவதாக கண்டால் அடுத்த முறை தண்டத் தொகை இரட்டிப்பாகும்.

8.2 துணை விதிகளை மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசுப்படுத்துபவர் அட்டவணை –1ல் குறிப்பிட்டுள்ளபடி தண்டத்தொகை கட்ட இயலவில்லை என்றால் அவன்/அவள்–க்கு எதிராக நகரக் காவல் சட்டம் மற்றும் மாவட்டக் காவல் சட்டம்/ இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி வழக்கு தொடரப்படும்.

9.0 தண்டனை

துணைவிதிகளில் குறித்துள்ள விதிகளை மீறுபவர் அல்லது துணைவிதிகளில் குறித்துள்ள விதிகளை மீறும் 14 வயதுக்குட்பட்ட குழந்தைக்குப் பாதுகாவலனாக இருப்போர் நடைமுறையில் உள்ள சட்டத்தின் அடிப்படையில் தண்டனைக்கு உரியவர் எனக் கருதப்படுகின்றனர்.

10.0 மேல் முறையீட்டிற்கு உரிமை

மேட்டூர் நகராட்சி திடக்கழிவு மேலாண்மைத் துணைவிதிகள் 2016 ஆல் இடர் உற்ற அல்லது பாதிப்படைந்த யாரும் ஆணையாளருக்கு மேல் முறையீடு செய்ய உரிமை உள்ளவர்களாவர். இந்தத் துணை விதிகள் மேட்டூர் நகராட்சி மன்றத்தின் உரிய ஒப்புதல் பெற்ற பின் நடைமுறைக்கு வந்துள்ளன.

## அபராதக் கட்டணம்

### அட்டவணை-1

| வ. எண் | துணை விதிகள் | உட்பிரிவும்/ துணை விதிகள் விளக்கமும் | சட்டத்தை மீறினால் செலுத்த வேண்டிய தண்டத் தொகை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 4(2) | 50 மைக்கரான் அடர்த்திக்கு குறைவான பிளாஸ்டிக் கேரிபைகள் பயன்படுத்துதல் | |
| | | தயாரித்தல் | 5000/ |
| | | இருப்பு வைத்தல் | 1000/ |
| | | விநியோகித்தல் | 1000/ |
| | | விற்பனை செய்தல் | 1000/ (பொருள் பறி முதல்) |
| 2 | 4(3) | ஒருமுறையே பயன்படுத்தப்பட்டு வரும் பிளாஸ்டிக் பைகள், பிளாஸ்டிக் கேரிடைகள், தட்டுகள், டம்ளர்கள், மேஜைவிரிப்புகள், பிளாஸ்டிக் தாள்கள் | (பொருள் பறி முதல்) 1000/ மேல் |
| 3 | 4(4) | பிளாஸ்டிக் பைகளில் உணவு பொருள்களை சேமித்தல், விற்பனை செய்தல் | (பொருள் பறி முதல்) 1000/ மேல் |
| 4 | 4(5) | பிளாஸ்டிக் கவர்களை நீர்நிலைகளில் சேமித்தல் | 1000/ |
| 5 | 4(6) | வீடுகளில் பிளாஸ்டிக் கழிவுகளை தனியே வழங்காமல் | 100/ |
| 6 | 4(7) | உணவகங்கள், அலுவலகங்கள், தனியே வழங்காமல் | 500/ |
| 7 | 4(9) | திறந்த வெளியில் நிகழ்ச்சி நடத்துபவர்கள் பிளாஸ்டிக் கழிவுகளை முறையாக வழங்காமல் இருத்தல் | 1000/ |
| 8 | 4(10) | பிளாஸ்டிக் கழிவுகளை எரித்தல் | |
| | | தனி நபர் | 200/ |
| | | நிறுவனம் | 500/ |
| 9 | 6(1) | குறியீடு அல்லது பெயர் இல்லாத பிளாஸ்டிக் பைகள் விற்பனை அல்லது பொருள்கள் வழங்குதல் | (பொருள் பறி முதல்) 1000/ மேல் |
| 10 | 6(4) | பதிவு செய்யாமல் பிளாஸ்டிக் கேரிபைகள் விற்பனை செய்தல், பொருள் வழங்குதல் | (பொருள் பறி முதல்) 5000/ மேல் |

மேட்டூர்,
18-08-2018.

பா.நாராயணன்,
*ஆணையாளர்,*
*மேட்டூர் நகராட்சி.*

தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநரால் சேலம் அரசினர் கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.